புதுமலர்: 12 இதழ்: 04 ஆடி - ஆவணி

# அனல்

ஆசிரியர்: வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.07.2015

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - தேவனுக்கு உடன் வேலையாட்கள்!
- வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல்
- இளைப்பாறுதல் தருவேன்
- பெண்கள் பக்கம் - பற்றிக்கொண்டாள்
- நற்செய்திப்பகுதி - திடன்கொள்: பயப்படாதே!
- பக்தர்களின் பயிலகம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 68
- நேரடியாகக் கேட்போம்
- அருட்பணியாளர் சரிதை - ஆலன் கார்டினர், ஜான் அண்டர்சன்
- வினா விடை - 70
- அனலின் ஆன்மீக விருந்து
- தேவன் தந்த வைரங்கள்


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.





## எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.



T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்

என்றும் ஜீவிக்கின்ற இரட்சகர் இயேசுக்கிறிஸ்துவின் இணையறற நாமத்தினாலே உங்களை வாழ்த்துகின்றேன்.

மீண்டும் ஆடி - ஆவணி மாதங்களுக்குரிய அனல் சஞ்சிகைக் கூடாக சந்திக்க சந்தர்ப்பம் தந்தருளிய ஆண்டவர் இயேசுவுக்கே சகல மகிமையும் உண்டாவதாக.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து ஒவ்வொரு மனிதனையும் பரிசுத்தப் படுத்துவதற்கு ஆவலாகக் காத்திருக்கின்றார். தன் சாயலுக்கொப்பாக எம்மை மாற்ற அவரால் முடியும். ஏசா. 59:1 சொல்கின்றது 'இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாத படிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை என்று. எமது வாழ்வில் தேவன் கிரியை செய்யாதபடி நாமே தடையாகவுள்ளோம். உங்களை இரட்சிக்க, உங்களுக்கு நன்மை செய்ய, உங்களைத் தம் பிள்ளையாக மாற்றுவதற்காக அவர் ஆயத்தமாகவே இருக்கின்றார். கதறுதலின் சத்தம் கேட்கும் தேவனாகவே அவர் இருக்கின்றார்.

கல்வாரியில் சிலுவையில் தொங்கியபடி இயேசு கூறிய வார்த்தைகளில் ஒன்று 'எல்லாம் முடிந்தது' மனிதனுடைய பாவமன்னிப்புக் குரிய அனைத்தையும் இயேசு செய்து முடித்து விட்டார்.

சிலுவை மரணத்தின் மூலம் இயேசு எமக்குத் தந்த ஆசீர்வாதங்களை ஏன் நாம் பெறமுடியாதிருக்கின்றோம்? ஏன் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. மனந்திரும்பி இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்று உங்கள் பாவங்களை அவரிடம் அறிக்கை செய்து அவைகளை விட்டுவிடுங்கள். அப்போது அவர் கொடுக்கும் இரட்சிப்பை நீங்கள் பெற்று பாவத்தில் இருந்து விடுதலை பெறமுடியும். உங்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்படும்.

- ஆசிரியர் -




**கி**ருபா தனியார் கம்பனி ஒன்றில் விற்பனை மேலாளராக பணியாற்றிக் கொண்டு வருகின்றான். அவனுக்கு கம்பனியில் கொடுக்கப் பட்ட அனைத்து வேலைகளையும் கவனமுடனும், பயபக்தியுடனும், சுறுசுறுப்புடனும் செய்து வருவான். அது மாத்திரமல்ல, அவன் சகல கடமைகளையும் ஜெபத்துடன் தான் ஆரம்பிப்பான். இதனால் அந்த கம்பனியில் கிருபாவுக்கென்று தனி மரியாதை இருந்தது. அந்த கம்பனி பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் ஓர் கம்பனியாய் இருந்தமையால் ஒவ்வொரு வருட இறுதியிலும் அந்தக் கம்பனியில் சிறப்பாக கடமையாற்றியவர்களுக்கு கௌரவிப்புக்களும், பரிசில்களும் வழங்கப்படும். இதனால் அதில் பணியாற்றும் ஒவ்வொருவரும் தான் தான் வருட இறுதிப் போட்டியில் முதலிடம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு சிறப்பாக கடமையாற்றுவார்கள்.

இவ்வாறு காலம் உருண்டு ஓடி வருட நிறைவை எட்டிக் கொண்டிருந்தது. எனவே அந்த கம்பனியின் வளர்ச்சிக்காய் யார் யாரெல்லாம் சிறப்பாக கடமையாற்றி இருக்கின்றார்கள்? யார் சிறந்த கௌரவிப்புக்கும் முதல் பரிசிலுக்கும் தெரிவு செய்யப்படும் நபர் என்று அந்த கம்பனியின் மேல்மட்டத்தில் கணிப்பீடு செய்து கொண்டிருந்தார்கள். இறுதியாக அந்த கம்பனியின் ஆண்டு இறுதி பரிசளிப்பு விழாவுக்கு அனைத்து பணியாட்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. எனவே ஒவ்வொரு பணியாட்களும் எனக்குத் தான் முதலிடம் கிடைக்கும்! இல்லை அந்த நபருக்குத் தான் முதலிடம் கிடைக்கும் என்ற விவாதங்களுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் விழா மண்டபத்திற்கு வருகை தந்தார்கள்.

விழா ஆரம்பமாகியது. அந்த கம்பனியின் தலைவர் மேடைக்கு வருகின்றார்! ஒலிவாங்கியைச் சரிசெய்தவர், இவ்வருடத்தில் சிறப்பாக

கடமையாற்றி முதலிடம் பெற்றுக் கொள்ளும் நபர் நிறுவனத்தின் செலவில் வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா செல்வதற்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று அறிவித்தார். அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஒவ்வொரு பணியாட்களும் நான் தான் சுற்றுலா செல்லும் நபராக இருக்க வேண்டும் என்று தங்களுக்குள்ளே இறைவனை வேண்டிக்கொண்டிருந்தார்கள். அங்கே இருந்த கிருபாவுக்கு தன்னையே தன்னால் நம்பமுடியவில்லை, ஏனென்றால் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நபர் வேறு யாருமல்ல! கிருபா தான் முதலிடம் பெற்றுக் கொண்ட அந்த நபர். அவன் உடனே தன் உள்ளத்திலே தேவனுக்கு நன்றி தெரிவித்தான். அன்று அவன் சுற்றுலா செல்லவுள்ள நாடு, அவன் செல்லும் விமானம், பிரயாண ஒழுங்குகள் என அனைத்தும் வைக்கப்பட்ட பொதி பரிசாக கிடைத்தது. அதனைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தான்.

அவன் வெளிநாடு செல்வதற்கான குறித்த நாளும் வந்தது. இவன் ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது இவனை அழைத்துச் செல்வதற்காக கம்பனியால் அனுப்பி வைக்கப்பட்ட அதி உயர் சொகுசு கார் வீட்டு வாசலில் காத்திருந்தது. மிகவும் மகிழ்ச்சியுடன் அதில் ஏறி விமான நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றான். விமான நிலையத்தில் இவனுக்கு அதி உயர் கௌரவ வரவேற்பு அளிக்கும்படி கம்பனியால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மிகவும் கௌரவமாக விமான நிலையத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டு, விமானத்தில் ஏற்றப்பட்டான். மிகவும் மகிழ்ச்சியுடன், உள்ளே சென்றவனுக்கு முதல் தர வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. விமானம் புறப்படும் நேரம் வந்ததும் விமானம் மேலெழுந்து வானத்தில் பறக்க ஆரம்பித்தது. அவ்வாறு விமானம் நடுவானத்தில் பறந்து கொண்டிருக்கும் போது அங்கே வந்த விமானப்பணிப்பெண் இவனுக்கு விலை உயர்ந்த உயர்ரக மதுபானம் அடங்கிய பொதி ஒன்றைக் கொடுத்தாள். இவன் எனக்கு இதனை ஏன் தருகின்றீர்கள்? எனக்கு இது வேண்டாம் என்று கூறிய போது அவள் சொன்னாள். ஐயா! உங்கள் கம்பனியால் இவை எல்லாம் உங்களுக்கு வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது, எனவே இதனைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றாள். அதற்கு கிருபா இல்லை.. இல்லை நான் இதனைக் குடிப்பதில்லை. வேண்டாம் என்று சொன்ன போதும் விமானப் பணிப்பெண் விடுவதாக இல்லை. கண்டிப்பாக உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இதனை நீங்கள் தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினாள். இதனை அவதானித்த அந்த விமானத்தின் அதிகாரி அங்கே வந்து சொன்னார்: சேர்! நீங்கள் தான் இந்த விமானத்தின் அதி உயர் விருந்தினராக பயணித்துக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களுக்குத் தான் இந்த மதுபானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

உடனே கிருபா கேட்டான்: ஆம் நான் தான் அதி உயர் விருந்தினராக பயணித்துக் கொண்டிருக்கின்றேன் என்றால், எனக்கு அடுத்து யார் இந்த விமானத்தில் உயர் பதவியில் இருக்கின்றார்கள் என்றான். அந்த அதிகாரி சற்று யோசித்து சொன்னார்: உங்களுக்கு அடுத்த இந்த விமானத்தை ஓட்டும் தலைமை விமானி தான் உயர்ந்தவராக இருக்கின்றார் என்று சொன்னார். அப்போது கிருபா சொன்னான்: நல்லது! இந்த மதுபானத்தை எனது சார்பாக

அவருக்கு கொடுத்துவிடுங்கள், அவர் இதனை குடித்துவிட்டு விமானத்தை ஓட்டலாம் என்றான். பதறிப்போன அந்த அதிகாரி சொன்னார்: சேர் என்ன சொல்கின்றீர்கள்? **விமானி இப்போது கடமையில் இருக்கின்றார். அவர் கடமையில் இருக்கும் போது மதுபானத்தை பெற்றுக் கொள்ளவும் முடியாது. குடிக்கவும் முடியாது. அப்படி அவர் செய்தால் அவருடைய பதவிக்கும் பிரச்சினை. இந்த விமானத்திற்கும் பிரச்சினையாகிவிடும் என்றார். அதற்கு கிருபா சொன்னான்: ஐயா! நானும் என்னுடைய பரமதகப்பனின் கடமையில் இருக்கின்றேன். ஆகவே நானும் இந்த மதுபானத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது. குடிக்கவும் முடியாது. அப்படிச் செய்தால் எனக்கும் பிரச்சனையாகிவிடும் என்று தெளிவாக கூறினான். இதனைக் கேட்ட அந்த அதிகாரிக்கு தூக்கிவாரிப்போட்டது.**

ஆம்! பிரியமான நண்பர்களே கிருபா அந்த விமானத்தில் அதனைக் குடித்திருந்தால் அது யாருக்கும் தெரிந்திருக்காது, அல்லது அதனை வாங்கி வேறு யாருக்கும் கொடுத்து இருந்தாலும் யாருக்கும் தெரிந்திருக்காது. ஆனால் அவனுக்கு தெரியும் தான் எப்போதும் பரம தகப்பனுக்கு கடமையாற்றுபவன். அவரது பணியில் இருப்பவன் ஒரு போதும் அவ்வாறான தவறான காரியத்தை செய்யக்கூடாது என்ற உணர்வுடன் இருந்தான். ஆனால் எம்மில் பலர் அரச பணிகளில் பணியாற்றலாம், அல்லது தனியார் துறையில் பணியாற்றலாம், ஏன் சொந்த தொழில்கள் செய்யலாம். அங்கெல்லாம் எமது செயற்பாடுகள் எப்படி இருக்கின்றது? அங்கே மற்றவர்களுடன் சேர்ந்து தவறான வழிகளில் நடக்கின்றோமா? அல்லது நாம் எப்போதும் தேவனுடைய கடமையில் இருக்கின்றோம் என்ற உணர்வுடன் எம்மைக் காத்துக் கொண்டிருக்கின்றோமா? என்று எம் வழிகளை சற்று சிந்தித்துப்பார்ப்போம். **1கொரிந்தியர் 3:9 நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்: நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்.**

வை. விமல்

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 67

## சரியான பதில்கள

**இடமிருந்து வலமாக**

01. குப்பைமேடு - எஸ்றா 6:11
07. தானியேல் - தானியேல் 10:16
08. கோராகு - யாத்திராகமம் 6:21
11. பொல்லாப்பு - 1இராஜா 1:52

**வலமிருந்து இடமாக**

03. சகாயம் - சங்கீதம் 124:8
05. அமத்சியா - 11நாளா 25:5
09. அப்சலோம் - 11சாமு 18:18
13. சன்பல்லாத் - நெகேமியா 4:1

**மேலிருந்து கீழாக**

02. மொர்தெகாய் - எஸ்றா 2:7
04. யாக்கோபு - மாற்கு 3:17
10. சிசெரா - நியாயா 4:15

**கீழிருந்து மேலாக**

06. தோதோ - 1நாளா 11:12
09. அம்மியேல் - எண்ணா 13:12
12. யோசேப்பாசெபெத் - 11சாமு 23:8
13. சல்லூமின் - 11இரா 15:14

# எழுப்புதலுக்கான இதயக்கதறல்






**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாலிப உள்ளங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்! மறுபடியும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.**

மேலுள்ள வாசகம் உலகில் தேவனுக்காய் பிரகாசித்த தேவ ஊழியரின் கதறல் மட்டுமல்ல, இன்று தேவையான அவசரமான ஒன்றாகவும் உள்ளது. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் ஓர் பெரிய எழுப்புதலின் அலை கடந்து சென்றது. இதற்கு முக்கியமான காரணம், ஆண்டவரை ஏற்ற (அறிந்த) தேவனுடைய மக்கள் தங்கள் இருதய சீர் திருந்தலோடு தேவனை நோக்கி தேவன் விரும்பியபடி கதறி வாஞ்சித்ததாகும்.

இன்றும் கூட 21ஆம் நூற்றாண்டில் வாழும் ஒவ்வொரு தேவ பிள்ளையும் சத்திய வேதத்தின்படி தேவன் எதிர்பார்க்கும்/விரும்பும் ஓர் இருதய கதறலை தொனிக்கப்பண்ணுமாயிருந்தால் அதுவே **எழுப்பு தலுக்கான ஆரம்ப நிலையாகும்.** தேவன் என் இருதயத்தில் கிரியை செய்ய வேண்டும் என்ற வாஞ்சை உன்னை நிரப்ப இடங்கொடு, கர்த்தரைச் சேவிப்பதில் களைப்படைந்து பல காரணங்களைக் காட்டிவிடாதே.


**இன்றும் கூட 21ஆம் நூற்றாண்டில் வாழும் ஒவ்வொரு தேவ பிள்ளையும் சத்திய வேதத்தின்படி தேவன் எதிர்பார்க்கும்/விரும்பும் ஓர் இருதய கதறலை தொனிக்கப்பண்ணுமாயிருந்தால் அதுவே எழுப்பு தலுக்கான ஆரம்ப நிலையாகும்.**

**ஏசாயா 40:31 கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.** என் அருமை தேவ பிள்ளைகளே, சாத்தான் பயன்படுத்தும் அதி வலிமை மிக்க உச்சக்கட்ட ஆயுதம் சோர்வையும், அதைரியத்தையும் உன் வாழ்வில் விதைத்து தேவனுக்கு உபயோகமற்றவனாக செயலற்றுப் போக உன்னை வைப்பதே. ஆனால் ஆண்டவருக்கு நீ காத்து இருக்கும் போது அவருடைய இருதய எண்ணம், ஏக்கம் உனக்குத் தெளிவையும் உற்சாகத்தையும், விடுதலையையும் தரும்.



## அழும் கண்களே கர்த்தருக்குப் பிரியம்

அழும் கண்களே கர்த்தருக்கு அதிக பிரியம். அவர் (இயேசு) அழுகிறவராய் தானே இருந்தார். **லூக்கா 19:41 அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது,** அவர் அழுததோடு பிறரையும் அழும்படியே கட்டளை கொடுக்கிறார். **லூக்கா 23:28 இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.**

இயேசுவைக் குறித்து எழுதிய ஒரு ரோமன்: "அவர் நகைத்ததை ஒருவரும் கண்டதில்லை; ஆனால் அவர் அழுவதையோ பலரும் பல வேளைகளில் கண்டிருக்கின்றனர்" என்று குறிப்பிட்டான். அழுகிறவர்கள் (கதறுகிறவர்கள்) அவர்களையே அவர் பாக்கியவான்கள் என்றார். ஆம் அழுவதே பாக்கியம்.

---

அன்னாள் அழுதாள் (கதறல்) சாமுவேல் பிறந்தான்; எசேக்கியா அழுதான் (கதறல்) ஆயுளோடு 15 ஆண்டுகள் கூடப்பெற்றான். எருசலேம் மக்கள் அழுதார்கள் (கதறல்) சமுதாய சீர்திருத்தம் ஏற்பட்டது; நெகேமியா அழுதான் (கதறல்) எருசலேமின் அலங்கம் கட்டப்பட்டது. பாபிலோனிலிருந்து யூதர் அழுதார்கள்; ஒரு ஜாதியாய் நிலைநாட்டப்பட்டார்கள். பேதுரு அழுதான் பரலோக ராட்சிய திறவுகோல்களைப் பெற்றான்; மரியாள் அழுதாள் உயிர்த்தெழுந்த இயேசுவைத் தரிசித்தாள்.

---

எவ்வளவோ சிறந்த சிலாக்கியங்களைப் பெற்ற எருசலேம் தான் ஆவலோடு எதிர்பார்த்த மேசியா வந்த போது அவரை அவமதித்த தையும் அதன் பலனாய் அவர்கள் மேல் வரவிருந்த மகா கொடிய ஆக்கினையையும் கண்ட கருணையுள்ள கர்த்தர் கதறியளவில்லையா? ஒரு குழந்தை இறக்கின்ற போது பெற்றோரின் கதறல் தாங்க முடியுமா? ஒரு வேளை அது பரலோக இன்பம் அனுபவிக்கலாம்: **ஆனால்**

**தினந்தோறும் சில லட்சம் பேர் ஒரு போதும் வெளியேற முடியாத நித்திய நரக அக்கினியில் விழுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நீ கதறாது இருப்பாயானால் உன் மனச்சாட்சி எப்படிப்பட்டது?**

எழுப்புதலுக்கான கதறல் எனும் போது அழிகிற ஆத்துமாக்களுக்காக அழுகிற (கதறுகிற) சிலாக்கியத்தையே உன் கர்த்தர் உனக்களித்திருக்கிறார் என்பதை உணர முடிகிறதா? அழுகிறவர்களுடனே அழுங்கள் என்று சத்திய வேதம் நமக்கு போதிக்கவில்லையா? **(ரோமர் 12:15).**

**இந்த தேசத்தில் காணப்படும் அருவருப்புக்களுக்காகவும், அக்கிரம அநியாயங்களுக்காகவும் பெருமூச்சுவிட்டு அழாமல் நீ நிர்விசாரமாயிருப்பாயானால் உனக்கு ஐயோ என்று தானே ஆண்டவர் கூறுகின்றார். சங்காரக்காரனின் பட்டயம் உன்னைத் தப்பவிடாது என்பதை மறவாதே. (ஆமோஸ் 6:1, எசேக்கியேல் 9:4-6) ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. இது அழவும் புலம்பவும் வேண்டிய காலம். பிரசங்கி 3:4 பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் கதறி... எபிரெயர் 5:7 இரத்தமே வியர்வையாய் கொட்டு மளவிற்கு... லூக்கா 22:44 பாரத்தோடு கதறி ஜெபித்த பரிசுத்த தெய்வத்தின் மாதிரியை எப்போதும் மறந்துவிடாதே.**

## ஜெபிக்கலாமா?...

பிதாவே நாங்கள் எங்களுக்காக அழுதது போதும், அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக கதறும், கண்ணீர் விடும் இருதயத்தைத் தாரும். எழுப்புதலடைந்த ஒரு தூய்மையான தேசமாய் எங்கள் தேசத்தை மாற்றும் - ஆமென்.

உன் இளமையின் நீ வைத்துப் போக வேண்டிய ஓர் மிகச்சிறந்த அடிச்சுவடு **"எழுப்புதலுக்கான இதயக் கதறலாகும்".**






**வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

சர்வவல்லமையுள்ள அன்பின் தெய்வமாம் இயேசுவின் வார்த்தைகள் இவைகள். சகல அதிகாரத்தையும் உடையவராய், மகா வல்லமை பொருந்திய தேவனாய் அழைக்கிறார். பலவித மான பாவ பார சுமைகளோடு நீ இருப்பாயானால் இளைப்பாறுதல் தரும் இயேசுவிடம் வந்துவிடு.

பற்பல காரியங்களினால் நீ ஒருவேளை வருத்தமுற்று சரீரத்தில், ஆவியில் இருப்பாயா னால் அதற்கு ஆறுதல் தரும் தெய்வம் இயேசு ஒருவர் மாத்திரமே!. தீராத பரம்பரை சாப கட்டுக்களிலிருந்தும், ஒளிமய மான ஓர் புதுவாழ்வு உன் வாழ்வில் மலர உனக்காக ஆணிகள் கடாவப்பட்ட விரித்த கரத்துடன் ஆவலாய் உன்னை அழைக்கிறார், இயேசு கிறிஸ்து. அவரை நம்பு! அவரை விசுவாசி! மெய்யான இளைப்பாறுதலைக் கண்டடைவாய்.



ரேமா



# பற்றிக்கொண்டாள்!




**பெ**ண்கள் பொதுவாக எதையும் சீக்கிரத்தில் பற்றிக் கொள்வதில் மிகவும் உற்சாகம் உடையவர்களாய் இருப்பார்கள். வேதாகமத்தில் விடாமல் பற்றிக் கொண்ட ஒரு பெண்ணின் சம்பவத்தை **ரூத் 1:14** இல் காணலாம். **அப்பொழுது அவர்கள் சத்த மிட்டு அதிகமாய் அழுதார்கள்: ஒர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப்போனாள்: <u>ரூத்தோ அவளை விடாமல் பற்றிக்கொண்டாள்.</u>** ரூத்தோ **அவளை விடாமல் பற்றிக் கொண்டாள்** என எழுதப்பட்டிருக்கின்றது.

எவளை ரூத் பற்றிக்கொண்டாள்? ஒரு விதவை இன்னொரு விதவையை பற்றிக் கொள்கின்றாள். ஒரு பணக்கார விதவையை அல்ல, கணவனை இழந்தவள், தான் பெற்ற இரு புதல்வர்களையும் இழந்த வள், வாழ்க்கையில் தோல்வி, வேதனை, குறைவு, நிந்தனைகள், கண்ணீர்.. அது மட்டுமல்ல, வயது சென்றவளும கூட. அப்படிப் பட்ட விதவையை தான் ரூத் பற்றிக் கொண்டாள்.

*எவளை ரூத் பற்றிக்கொண்டாள்? ஒரு விதவை இன்னொரு விதவையை பற்றிக் கொள்கின்றாள்.*

**ரூத் 1:21 நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்: கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்ணினார்: கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள்.** அப்படிப்பட்ட மாமியைத் தான் ரூத் பற்றிக் கொண்டாள். நிறைவுள்ளவளாய் மாமி

யோடே இருந்த ரூத் துன்பத்தின் நேரத்தில் மாமியை விடாமல் பற்றிக கொண்டாள் என்றால்: நாம் இதில் இருந்து கற்றுக் கொள்ள அருமையான ஒரு பாடம் இருக்கின்ற தல்லவா?

நகோமி தன்னுடைய இரண்டு விதவை மருமக்களையும் நேசித்ததின் நிமித்தம் அவர்களுக்கு ஆலோசனை கொடுக்கின்றாள்: **நீங்கள் உங்கள் தாய் வீட்டுக்குத் திரும்பிச் செல்லுங்கள், கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால் உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது என்றாள் (ரூத் 1:13). இதைக் கேட்ட ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டு, தன் ஜனங்களிடத்திற்கும், தன் தேவர்களிடத்திற்கும் திரும்பி போய்விட்டாள்.** அப்படியே ரூத்தையும அவள் பிறகே திரும்பி போகும்படி நகோமி கூறினாள். ஆனால் ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டது மாத்திரமல்ல, நீர்போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன்: என்னுடைய தேவன், அது மட்டுமல்ல நகோமி மரணம் அடையும் இடத்திலே தானும் மரணம் அடைந்து அடக்கம் பண்ணப்படுவேன் என்று ஒரு உறுதியான தீர்மானத்துடன் மாமியோடே திரும்புகிறாள்.

நகோமி ஏழ்மையாக, விதவையாக, கசந்தவளாக, மிகுந்த வெட்கத்துடன் ரூத்தையும் அழைத்துக் கொண்டு பெத்லகேமுக்குள் நுழைந்திருப்பாள். **ஆனால் அவர்கள் இருவருக்கும் ஓர் ஒளிமயமான காலம் காத்திருந்தது என்பதை அப்போது அவர்கள் அறிந்திருக்கவில்லை.** பெத்லகேமை அடைந்த ரூத் சோம்பலாக இருக்க விரும்பவில்லை. அவள் தன் மாமியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வயல் வெளியில் கதிர்களை பொறுக்க சென்றாள். அங்கே தற்செயலாய் அவள் சென்ற வயல் போவாசுடைய தாக இருந்தது. அங்கே வயலில் சிந்தின கதிர்களை பொறுக்கிக் கொள்ள கேட்டுக்கொண்டாள். ரூத் மாமியின் அனுமதியுடன் வந்து தாழ்மையுடன் சுறு சுறுப்பாய் வேலை செய்ததின் நிமித்தம் அவள் பொறுக்கிக் கொள்ளும்படி வேண்டும் என்று சித்தப்பட கட்டளைகளையும் அது மாத்திரமல்ல அவளுக்கு தேவையான பாதுகாப்பு, பராமரிப்பு கொடுக்கப் பட்டது.

அத்துடன் ஒரு கட்டளையும் கொடுக்கப் படுகின்றது. **ரூத் 2:8, 12 (2) அப்பொழுது போவாஸ் ரூத்தைப்பார்த்து: மகளே, கேள்: பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தைவிட்டுப போகாமலும், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடு கூடவே இரு. 12. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக.**

**இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக என்றான்.**

**2015ஆம் ஆண்டின் அரை ஆண்டு முடிந்துவிட்டது. ஏழாம் மாதத்திற்குள் வந்திருக்கும் சகோதரியே, ஒரு வேளை உன்னுடைய வாழ்க்கையும் நகோமியைப் போல கசந்ததாக இருக்கலாம். பயப்படாதே, அனல் சஞ்சிகை உனக்கு ஒரு நல்ல செய்தியை வைத்திருக்கிறது.**

நகோமி இனி தன்னுடைய வாழ்க்கையில் சந்தோசம் இல்லை, ஒரு ஒளிமயமான வாழ்வு இல்லை, ஆனாலும் ரூத் சுகமாக வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் செயற்பட ஆரம்பித்த நகோமியின் வாழ்விள் ஒளிமயம் வீச ஆரம்பித்தது. நகோமியைப் போன்று உன்னுடைய வாழ்வு கசப்பாக இருந்தாலும் மற்றவர்களுடைய வாழ்க்கையில் சவுக்கியத்தை தேட ஆரம்பி அப்போது உன் வாழ்வு துளிர்விட ஆரம்பிக்கும்.

நகோமியின் வாழ்வில் மட்டுமல்ல, அவளுடைய விதவை மருமகளாகிய ரூத்தின் வாழ்க்கையும் துளிர்விட ஆரம்பிக் கின்றது. **ரூத் 3:3 நீ குளித்து, எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு, அந்தக் களத்திற்குப் போ: அந்த மனுஷன் புசித்துக் குடித்துத் தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு.** மாமியின் கட்டளைக்கு ரூத் கீழ்ப்படிகின்றாள். ஏன்? எதற்கு? இதனை கட்டாயம் செய்ய வேண்டுமா? என்ற எந்தக் கேள்வியும் ரூத் நகோமியிடம் திரும்ப கேட்கவில்லை. கடந்த நாட்களில் தேவன் உனக்கு இட்ட கட்டளைகளுக்கு கீழ்ப் படியாமல் இருந்துவிட்டாயா? அதினிமித்தம் உன் வாழ்வு கசந்திருகலாம். இப்போது கீழ்ப்படிவதற்கு நீ தீர்மானம் எடு. ரூத் எவ்வாறு நகோமியின் ஆலோசனையின் படி நடந்து, விட்டு விடாமல் பற்றிக்கொண்டது போல நீயும் உன் தேவனை எல்லாக் காரியங்களிலும் அவருடைய ஆலோசனைகளை விடாமல் பற்றிக் கொள். அப்போது உன் வாழ்வில் ஆசீர்வாதம் உண்டாகும்.

> "
> *உனக்கு கொடுக்கப்பட்ட சபை தான் உன்னுடைய வயல் நிலம். அதில் உனக்கு கிடைக்கும் ஆகாரம் உனக்கு தேவனால் கொடுக்கப்படும் ஆகாரம்.*

**ரூத் 1:8 அப்பொழுது போவாஸ் ரூத்தைப்பார்த்து: மகளே, கேள்: பொறுக்கிக் கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தை விட்டுப் போகாமலும், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடேகூடவே இரு.** என்று போவாஸ் ரூத்திற்கு ஒரு கட்டளை

கொடுக்கின்றார். சகோதரியே கடந்த நாட்களில் தேவன் உனக்கென்று வைத்திருக்கும் வயலைவிட்டு வேறு வயலிற்கு பொறுக்கிக் கொள்ள ஓடித்திரிந்திருக்கின்றாயா? **உனக்கு கொடுக்கப்பட்ட சபை தான் உன்னுடைய வயல் நிலம்.** அதில் உனக்கு கிடைக்கும் ஆகாரம் உனக்கு தேவனால் கொடுக்கப் படும் ஆகாரம். தேவன் உனக்கு கொடுத்த வயல் (சபையை) விட்டு வேறு எங்கிருந்தோ ஆகாரம் தேடித்திரிகின்றாயா? தேவன் உனக்கு கொடுத்த சபையில் தான் உனக்கு பாதுகாப்பு, பராமரிப்பு உண்டு என்பதை மறந்து போகாதே!

**ரூத் 2:11 அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது.** உன் மாமியாருக்கு நீ செய்தது, உன்னுடைய வாழ்க்கையிலும் நீ மற்றவர்களுக்கு செய் கின்ற காரியத்தை தேவன் கவனிக்கின்றார். உன்னுடைய வாழ்வில் நிறைவான பலன் வேண்டுமா? நீ செய்யவேண்டியது ரூத் போவாசின் கட்டளைப்படி வேறு வயலுக்குச் செல்லவில்லை. நகோமியின் ஆலோசனையின்படி நடந்து அவளை விடாமல் பற்றிக்கொண்டரூத்தைப் போல உன்னை இரட்சித்த உன் தேவனின் ஆலோசனைப்படி நடந்து அவரை விடாமல் பற்றிக்கொள்வாயாக இருந்தால் **ரூத் 2:12 உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக என்றான்.** தேவனை நீ பற்றிக் கொள்ளும் போது அவர் உன்னை சாகவிடமாட்டார்.

**திருமதி. J.பிலிப்**



---

**அன்பு நிறைந்த மதித்தல் மூலம் முழுச் சபையின் நலத்துக்கும் சேவை செய்யக் கூடியதாய் இருக்கும்.**







**மத்தேயு 14:27 உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்.** அன்பு சகோதரா, சகோதரி மறுபடியும் நற்செய்திப் பகுதிக்கூடாக உங்களை சந்திப்பதில் கிறிஸ்துவுக்குள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இன்று பலரது வாழ்க்கை கேள்விக் குறியோடு இருப்பதனை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மனித வாழ்க்கையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் பல மனித வாழ்க்கைகளை விதைத்து சின்னாபின்னமாக்குவதையும், சின்னாபின்னமாக்கியதையும் நாம் காணமுடிகின்றது.

இதன் நிமித்தம் பலரது வாழ்வு விரக்தியினாலும், இனம் புரியாத பயத்தினாலும் சூழப்பட்டுள்ளார்கள். இதே போன்று வேதாகமத்திலே ஒரு சம்பவமுண்டு. ஆண்டவரோடு இருந்து சீஷர்கள் கப்பல் பயணம் ஒன்றை மேற்கொண்டார்கள். அவர்கள் கப்பல் பயணம் செய்து நடுக்கடலில் வந்துவிட்டார்கள். மகிழ்ச்சியோடு, சந்தோஷத்தோடு கப்பல பயணம் செய்தவர்கள், அவர்கள் எதிர்பாராத வகையில் காற்று அடிக்க ஆரம்பித்தது.

**உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங் கள் என்றார்.**

மத்தேயு 14:24 **அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்த படியால் அலைகளினால அலைவுபட்டது. மத்தேயு 14:30 காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்.** இதினிமித்தம் அலை மிகவும் வேகமாக அடிக்க

படவு அலைகளினால் அலைவுபட்டது. படகு அமிழத்தக்கதாக காற்று பலமாக அடித்தது. **மாற்கு 4:37 அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி,படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று.** தண்ணீர் நிரம்பத்தக்கதாக அலைகள் அதின் மேல் மோதிற்று. சீஷர்கள் பயந்தார்கள்.

அன்பு சகோதரா, சகோதரி உன்னுடைய கடந்த கால வாழ்க்கையிலும் சரி, அல்லது இப்போது நடந்து கொண்டிருக்கும் வாழ்க்கையிலும் சரி, குடும்ப பிரச்சினை என்னும் அலை, தீர முடியாத வியாதி என்னும் அலை, வறுமை என்னும் அலை, கடன் பிரச்சினை என்னும் அலை, அவமானம் நிந்தனை என்னும் அலை, மனிதர்களின் புறக்கணிப்பு, அற்பமாக எண்ணப்படுதல் என்னும் அலை, படிக்க முடியாத, வேலையை சந்தோஷமாக செய்ய முடியாத நிலை போன்ற மிகப் பெரிய அலைகள் எம்முடைய வாழ்க்கைப் படகை அலையப்பண்ணும். அப்போது என்ன செய்வது என்று தெரியாது பயந்து, தடுமாறி பல சந்தர்ப்பங்களில் தப்பான முடிவுகளை எடுக்கக்கூடிய சூழ்நிலைக்கு நீங்கள் தள்ளப்படலாம். அல்லது பயந்து ஒரு விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கலாம்.

அன்பு நண்பா! நண்பி! உனக்கு வாழ்வு அளிக்கும், புது ஜீவன் கொடுக்கும் ஒரு நல்ல செய்தி உண்டு. உன்னை உருவாக்கி, உனக்கு ஜீவ சுவாசத்தை தந்து, உனக்காக தன்னையே ஒப்புக்கொடுத்த அந்த ஜீவிக்கின்ற ஆண்டவர் அன்றைக்கு சீஷர்கள் இவ்விதமாக கஷ்டப்பட்ட போது அதனை அறிந்து **மத்தேயு 14:25 இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.** இயேசு கிறிஸ்து அவர்களிடத்தில் வந்தார். **மத்தேயு 14:32 அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது.** அவர் படவில் ஏறினவுடன் காற்று அமர்ந்தது. சுமூகமான நிலை உருவானது.

இதே சீஷர்களைப் போன்று நீயும் தடுமாறி பயந்து போயிருக்கலாம். உன் இருதய கதவண்டை நிற்கும் இயேசுவிற்கு உன் வாழ்வில் இடம் கொடுப்பாயானால் எல்லா காற்றும், எல்லா அலைகளும் அமர்ந்து உன் வாழ்வின் படகு சுமூகமாக பிரயாணம் செய்யும்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**J.கிறேசியன்.**




# ★ புதிய ஏற்பாட்டுத் திருச்சபை ★

## 04. உதவிக்காரரின் தெரிவு

எருசலேம் சபையார் சேர்ந்து உதவிக்காரர்களைத் தெரிந்தெடுத்ததை அப்போஸ்தலர் 6ஆம் அதிகாரத்தில் காணலாம். **உதவிக்காரர்கள் அதே உள்ளூர் சபையில் இருந்து அதே உள்ளூர் சபையாரால் தெரிவு செய்யப்பட வேண்டும்.** வெளியே இருக்கும் எந்த சபைக்கும் உள்ளூர் சபையின் மேல் அதிகாரமும் ஆதிக்கமும் இல்லை.

**இப்படிப்பட்ட ஏதாவது கட்டம் வந்தால் முழுச்சபையின் சம்மதத்துடன் தான் செய்ய வேண்டும்.** உதவிக்காரர் நிலைப்படுத்தப்படுதலைப் பற்றி அப்போஸ்தலர் 6:6இல் கூறப்படுகின்றது. **இங்கு ஜெபமும் கரங்களை வைத்தலும் காணப்படுகின்றது.** இப்படிச் செய்வதன் மூலம் தேவன் தேவையான ஞானம், வல்லமை போன்றவற்றை கொடுக்கும்படி கேட்கின்றோம்.

**கரங்களை வைப்பதன் மூலம் இன்னொன்றும் தெளிவாகின்றது:** அதாவது இப்போதில் இருந்து இவர்களுக்கூடாக நாம் செயற்படுகின்றோம். இவர்கள் நம்முடைய பிரதிநிதிகள். உதவிக்காரனும் மும்முரமான தேவ சேவைக்குத் தன்னைத் தயார்ப்படுத்த வேண்டும்.

**அத்துடன் சபையின் அங்கத்தவர்களும் உதவிக்காரர்களை அன்புடன் மரியாதை செய்ய வேண்டும். 1கொரிந்தியர் 12:25 சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு, அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்.** அழிவை, பிரிவினைகளை உண்டுபண்ணும் விமரிசனங்களை சபையில் அனுமதிக்கக்கூடாது.

**அன்பற்ற விமரிசனம் தேவ ஆவியானவரின் கிரியைகளை அவித்துப் போட்டு விடும்.** நாம் ஒருவர் ஒருவரைக் குறித்து நேரான மனப்பாங்கு உள்ளவர்களாக இருக்க வேண்டும். **கலாத்தியர் 6:2 ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். வேதம் சொல்வதைக் கவனியுங்கள்.** உதவிக்காரர் சுமக்க வேண்டிய பாரங்கள் அநேகம் உண்டு. **இவர்களுக்காக நாம் ஜெபிப்பதன் மூலம் நாம் இவர்களுக்கு உதவி செய்யலாம்.** அத்துடன் இவர்களது கடமையைக் குறித்தும் நாம் புரிந்துணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும். **இது அவர்கள் சுமைகளை இலகுவாக்கும்.** இவ்விதமான அன்பு நிறைந்த மதித்தல் மூலம் முழு சபையின் நலத்திற்கும் இவர்களால் சேவை செய்யக்கூடியதாய் இருக்கும்.

## அங்கத்தவர்கள்

ஒவ்வொரு தாவரமும் வளர அதற்கு ஏற்ற மண்வளமும் சுவாத்தியமும் அவசியம். **ஒரு குளிர்ப்பிரதேச தாவரம் சூடான சுவாத்தியம் உள்ள இடத்தில் சரியாக வளராது.** ஒரு கிறிஸ்தவன் கிருபையில் வளர உள்ளூர் சபையின் ஐக்கியம் அவசியம். **எவ்வளவுக்கு வேத வசனத்திற்கு இசைந்ததாக சபை இருக்கின்றதோ, அவ்வளவுக்கு அதிகமாக வளர சாத்தியம் உண்டு.**

ஒரு நல்ல சபையில் சிலர் இருந்தாலும் அவர்கள் கிருபையில் வளராமல் இருப்பதை நாம் காணலாம். **இதற்கு காரணம்: தேவனுக்கும் அந்த விசுவாசிக்கும் இடையிலுள்ள தனிப்பட்ட உறவு.** நாம் இரட்சிக்கப்பட்டதே தேவனுடனும், தேவ மக்களுடனும் ஐக்கியமாக வாழவேயாகும்.

## 01. அங்கத்துவத்திற்கான தகமைகள்

இதைக் குறித்து ஓர் அருமையான ஆலோசனை அப்போஸ் தலர் *2:37-42*இல் காணப்படுகின்றது. **எல்லாவற்றிற்கும் தேவனுடைய வார்த்தையே சட்டம்.** பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு இருதயத்தில் குத்தப்பட்டவர்கள்: **சகோதரரே நாம் என்ன செய்ய வேண்டும் என கேட்டார்கள்"** இவர்களுக்கு திட்டமான தெளிவான பதில் கிடைத்தது.

**இது சபை அங்கத்துவத்திற்கு தேவையான தகமைகளைக் காண்பிக் கின்றது.** இவர்கள் பெற்றுக் கொண்டு வழிநடத்துதல் - சபையில் அங்கத்தவர்களாகும் வாய்ப்பை உண்டாக்கியது. **அப்போஸ்தலர் 2:41.**

எந்த வார்த்தைகளைப் பேதுரு கூறினார். **இதுவே சபை அங்கத்துவத்திற்கு வேண்டிய தகமையாகும்.**

***01.*** மனந்திரும்பு

***02.*** ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்

***03.*** பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்

இப்படிப்பட்ட அனுபவம் உள்ளவர்களே ஆதி சபையில் அங்கத்தவர்களாக இருந்தார்கள். **இவர்கள் செய்ததை அப்போஸ்தலர் 2:42 கூறுகின்றது.** இதுவே சரியான ஒரு உள்ளூர் சபையின் மாதிரியாக இருக்க வேண்டும்.

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)**

**தொடரும்...**

**"அன்பற்ற விமர்சனம் தேவ ஆவியானவரின் கிரியைகளை அவித்துப்போட்டு விடும்"**

# வினா விடை - 69 -

## சரியான விடை எழுதியவர்கள்

**ஊர்காவற்றுறை**

01. க.விக்னேஸ்வரன்
02. க.றெஜீவன்
03. வி.ஸர்மிளா
04. வி.நிதர்சனா

**காரைநகர்**

05. நா.கிறிஸ்ரீனா
06. சு.சுதர்சினி
07. நா.கிறிஸ்ரீன்
08. செ.லோகநாதன்
09. லோ.வதனி
10. சு.ஜஸ்மின்
11. தே.காந்தரூபன்
12. நா.சிவபாக்கியம்
13. க.றெஜிதா
14. அ.தெபோரா
15. கோ.மங்களேஸ்வரி
16. ஏஞ்சலினா
17. கே.போல்ராஜ்
18. ந.தயாழினி
19. த.யாழினி
20. சு.சீதா
21. ம.சுதாகர்
22. அ.அனுசலா
23. பா.அனுகரன்
24. பா.அனுசியா
25. மா.சுதர்சினி
26. பா.அனுராதா
27. அ.கிருசாந்தன்
28. அ.கம்சிகா
29. அ.துர்க்கா
30. அ.எஸ்தர்
31. அ.கிறிஸ்தீனா
32. அ.கிறிஸ்ரிஜோன்
33. அ.வெரோனிக்கா
34. த.சிவாஜினி

**நாவற்குழி**

35. எஸ்.ஜான்சி

**புன்னாலைக்கட்டுவன்**

36. தி.கலைக்குமரன்

# குறுக்கெழுத்துப்போட்டி – 68

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 01 | | | ■ | | | 02 | 03 |
| | 05 | ■ | ■ | 04 | | | | |
| | | 06 | | | ■ | ■ | ■ | |
| | | | ■ | | | 07 | | |
| | | | ■ | ■ | ■ | | | |
| | | 08 | | | ■ | | | |
| | | | ■ | | | 09 | 10 | ■ |
| 12 | ■ | | | | | | | 11 |

குறிப்பு:- 12வயதுக்கு
மேற்பட்டவர்களை தயவு செய்து
குறுக்கெழுத்துப் போட்டியை
செய்து அனுப்பும்படி
கேட்டுக்கொள்கின்றோம்.
- நன்றி -

## இடமிருந்து வலமாக

01. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்ததால் அந்த இடம் இவ்வாறு பெயரிடப்பட்டது.
04. யெப்தாவுக்குப் பிறகு இஸ்ரவேலை நியாயம் விசாரித்தவன்: இந்த ஊரைச் சேர்ந்தவன்.
06. தாவீதின் சகோதரரில் ஒருவன்.
08. நீதியின் ............ சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்.

## வலமிருந்து இடமாக

02. கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்தவர்களில் ஒருவர்
07. உறைந்த மழை பெய்த நாளில், கெபிக்குள் இறங்கி சிங்கத்தைக் கொன்றவன் (குழம்பியுள்ளது)
09. "இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்" எனக் கூறியவன்
11. யோவேலும், அபியாவும் இங்கே நியாயாதிபதிகளாயிருந்தார்கள்

## மேலிருந்து கீழாக

03. அம்மோன் புத்திரர் முற்காலத்தில் தங்கள் சேத்தில் குடியிருந்த இராட்சதர்களை இவ்வாறு அழைத்தனர்
05. அப்னேர் இவனை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்கினான்
06. கேபார் நதியண்டையில் கர்த்தருடைய கரம் இவன் மேல் அமர்ந்தது

## கீழிருந்து மேலாக

09. கோனியாவின் மறுபெயர்
10. சீமேயி இந்த ஆற்றைக் கடக்கும் நாளில் சாவான் எனக் கூறப்பட்டது
12. "திம்னாத் ஏரேஸ்" இதற்கு வடக்கேயிருந்தது




## வேதப்பகுதி: மத்தேயு 7:7-11

டேவிட்சனின் அப்பா அவனை தேவஊழியர் தேவநாதனிடம் அழைத்துப் போக விரும்பினார். எதற்காக என்னை அங்கே அழைத்துப் போகிறீர்கள் என்று கேட்டான் டேவிட்சன். அவர் உனக்காக ஜெபித்தால் உனக்கு பரீட்சையில் நல்ல வெற்றி கிடைக்கும் என்றார். அவர் ஜெபித்தால் நான் எப்படி வெற்றி பெறமுடியும் என்று கேட்டான் டேவிட்சன். அவர் ஜெபித்தால் கர்த்தர் கேட்டு உனக்கு வெற்றி தருவார் என்றார் டேவிட்சனின் அப்பா. அப்படியானால் நாம் ஜெபித்தால் கர்த்தர் வெற்றி தரமாட்டாரா? என்று கேட்டான் டேவிட்சன். நாம் ஜெபித்தாலும் கர்த்தர் கேட்பார் என்றார் டேவிட்சனின் அப்பா.



அப்படியானால் நாமே நேரடியாக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம் டாடி என்றான் டேவிட்சன். டேவிடசனின் ஞானத்தைப் பார்த்து டேவிட்சனின் அப்பா வியந்து போனார்.

**சிந்தனைக்கு:- நாம் தேவனுடைய பிள்ளைகள், நாம் அவரிடம் அப்பா என்ற உரிமையோடு நேரடியாகவே விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – ஏப்ரல் 15






# ஆலன் கார்டினர்

## 1794 – 1851

## தியாகம் எங்கே?

**ஆ**லன் கார்டினருக்கு மிகச் சிறு வயதிலேயே தீரச் செயல்கள் புரிவதில் மிகுந்த விருப்பம். கடற்படை பயிற்சியில் சேர்ந்து கப்பற்தலைவன் ஆனார்.

உலகின் பல நாடுகளுக்கும் கப்பற் தலைவன் என்ற பொறுப்பில் சென்று வந்தார். ஒரு சமயம் கப்பற் பயணத்தில் பசிபிக் தீவுகளின் ஒன்றான திதி தீவில் தங்க வேண்டியிருந்தது. இதுவரை அவர் சென்று வந்த தீவுகளைக்காட்டிலும் இது முற்றிலும் சிறந்ததாகக் காணப்பட்டது. தியாக சிந்தையோடு பணியாற்றிய மிஷனெரிகளே இதற்குக் காரணம் என்பதையறிந்த அவரின் உள்ளம் மிஷனெரிப் பணி செய்ய ஆவல் கொண்டது.

ஆண்டவரின் அழைப்பை உறுதி செய்து கொண்ட அவர், 1838ஆம் ஆண்டு தன் மனைவி குழந்தைகளுடன் தென் அமெரிக்காவின் தென் கோடியிலுள்ள மிலேச்ச இன மக்களிடம் சென்றார். 14 நாட்கள் மேடு பள்ளங்கள் நிறைந்த பாதைகளையும், ஆறுகளையும் கடந்து சென்றார். தான் பணி செய்ய வேண்டிய இடத்தை அடைந்த அவருக்கோ பெரும் ஏமாற்றம். அவ்வினத்தலைவன் அவர்களை உள்ளே விட அனுமதிக்கவில்லை. நான்கு முறை அவர்களின் பிரயாசம் வீணானது. அவர்கள் தங்கள் நாடு திரும்பும் நிலை ஏற்பட்டது.

**ஆலன் சோர்ந்து போய் அமைதியாக இருக்கவில்லை. தன் நண்பர்கள் ஏழுபேருடன் மீண்டும் மிஷனெரிப் பயணத்தைத் தொடங் கினார். ஆனால் பாதி வழியிலேயே அவர்கள் கப்பல் சேதமடைந்தது. எனவே அருகில் உள்ள தீவில் தரையிறங்கினார்கள். நிவாரணக்**

**கப்பலுக்காக செய்தியனுப்பியும் எவ்வித பதிலுமில்லை. ஆகாரப் பொருட்களும் தீர்ந்துவிட்டன. ஸ்கர்வி என்னும் நோய் அவர்களைத் தாக்கியது. ஒருவன் பின் ஒருவராக குழுவினர் அனைவரும் மரித்துவிட்டனர்.**

கடைசியாக இதே நாள் 1851ஆம் ஆண்டு ஆலன் கார்டினரும் தன் பயணக் குறிப்பை எழுதி வைத்துவிட்டு ஜீவபுஸ்தகத்தில் பெயரைப் பதிக்கும்படியாக விண்ணகம் சென்றார். 20 நாட்களுக்குப் பின் வந்த நிவாரணக் கப்பல் அவர்களின் தியாகத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டது. படகோனியர் மிஷனெரிச் சங்கம் ஆலன் கார்டினரின் தியாகத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

**அன்பரே! துணிந்து செயற்படும் வீரமுள்ள இதயம் உமக்கு வேண்டுமல்லவா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கர்த்தர் தமது பரிசுத்தவான்களுடைய இருதயத்தில் என்னென்ன ஆசைகளை அனுமதித்திருக்கிறாரோ அவைகளின் நிறைவேறுதலையும் தந்தருளுவார் — சாட்விக்**

*நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜீலை 11*



# ஜான் ஆண்டர்சன்

## 1805 – 1855

## வேதமே விடுதலையின் வழிகாட்டி

**08**ஆம் நூற்றாண்டு அயல்நாட்டு மிஷனெரிகள் ஏராளமானோர் இந்திய மண்ணில காலடியெடுத்து வைத்தனர். இந்தியா விற்கு விடிவு காலம் ஏற்பட அதுவே காரணமா னது. சமயப் பணிகள் மட்டுமல்லாமல், சமுதாயப் பணிகளையும் இத் திருத்தொண்டர்கள் செய்ததால், இந்திய நாடு வளம் பெற்றுள்ளது.

ஸ்காட்லாந்து திருச்சபை தென்னிந்தியாவிற்கு அருட்பணியாளராக இந்தியாவிற்கு வந்தார் ஜான் ஆண்டர்சன். தென்னிந்திய உயர்கல்வியின் முன்னோடியாக கருதப்படும் இவர், புகழ்மிக்க சென்னை கிறிஸ்தவக் கல்லூரியை நிறுவினார்.

அலெக்ஸாண்டர் டஃப் என்ற மிஷனெரியின் அறைகூவல் இவரை இந்திய மண்ணிற்கு அழைத்து வந்தது. கல்விப் பணியையே முதல் நோக்கமாகக் கொண்ட இவர், தென்னிந்தியாவில் ஆங்கில கல்விக்கு அடித்தளமிட்டார். வேதாகம சத்தியங்களை எளிய முறையில் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

**ஒரு சமயம், பெற்றோர்கள் சிலர் ஆண்டர்சனை அணுகினர். ஆங்கிலக் கல்வி மட்டுமே போதுமானது, வேதாகமக் கல்வி தேவையில்லை, அவைகள் தம் பிள்ளைகளுக்குத் தேவையில்லை என்று முறுமுறுத்தனர். இதனைக் கேட்ட ஆண்டர்சனோ வேண்டுகோளை மறுத்துவிட்டார். வேதாகமத்தின் சத்தியமே வாழ்க்கையின் ஆதாரம் என்பதில் உறுதியாக இருந்தார். மாணவர்கள் பலர் மனந்திரும்பினர். இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டனர். இதனால், கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. ஆண்டர்சனைக் கண்டபடி திட்டினர். ஆயினும், எதிர்ப்புக்களைக் கண்டு ஆண்டர்சன் அஞ்சவில்லை.**

சாதி, ஏற்றத்தாழ்வுகளால் சிக்குண்டிருந்த சமுதாயத்தை சீர்திருத்தினார். இவர், பெண்களுக்கு கல்வியின் தேவையை உணர்த்தினார். "நோட்டிவ் ஹெறால்ட்" என்ற பத்திரிகையை ஆரம்பித்து, இறைச் சிந்தனைகளை மக்களுக்கு கொடுத்தார்.

இவர் பெயரால் சென்னையிலுள்ள ஆண்டர்சன் திருச்சபை இவர் பணிகளை எடுத்துக் கூறுவதோடு நம்மையும் இறைப்பணிக்கு அறைகூவல் தருகின்றது.

**அன்பரே! மக்களின் கல்விக் கண்களைத் திறக்க முன்வரமாட்டீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: திருமறைகூறும் சத்தியங்களை மாணவர்கள் அறிந்து விடுதலை பெறவேண்டும் — ஆண்டர்சன்**

*நன்றி: மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜீலை 15*

## சரியான விடை எழுதியவர்கள்

**ஊர்காவற்றுறை**

01. க.விக்னேஸ்வரன்
02. க.றெஜீவன்
03. வி.ஸர்மிளா

**காரைநகர்**

04. நா.கிறிஸ்ரீனா
05. சு.சுதர்சினி
06. நா.கிறிஸ்ரீன்
07. செ.லோகநாதன்
08. லோ.வதனி
09. சு.ஜஸ்மின்
10. தே.காந்தரூபன்
11. நா.சிவபாக்கியம்
12. க.றெஜிதா
13. அ.தெபோரா
14. கோ.மங்களேஸ்வரி
15. ஏஞ்சலினா
16. கே.போல்ராஜ்
17. ந.தயாழினி
18. த.யாழினி
19. சு.சீதா
20. ம.சுதாகர்
21. அ.அனுசலா
22. பா.அனுகரன்
23. பா.அனுசியா
24. மா.சுதர்சினி
25. பா.அனுராதா
26. அ.கிருசாந்தன்
27. அ.கம்சிகா
28. அ.துர்க்கா
29. அ.எஸ்தர்
30. அ.கிறிஸ்தீனா
31. அ.கிறிஸ்ரிஜோன்
32. அ.வெரோனிக்கா
33. த.சிவாஜினி

**குறுக்கெழுத்துப் போட்டி - 67**

## வினாவிடை - 69 சரியான பதில்கள்

01. எசேக்கியா - ஏசாயா 38:9-14

02. அந்திப்பா - வெளி 2:13

03. சாலொமோன் - 1இராஜா 7:48

04. எக்லோன் - நியா 3:17

05. தேவதாரு விருட்சங்கள் - சங்கீதம் 104:17

06. மோரியா மலை- 11நாளா 3:1

07. அப்போஸ்தலனாகிய யோவான் - வெளி 4:7-8

08. லீசியா - அப்போஸ்தலர் 22:26-27

09. மோசே - யாத்திராகமம் 2:2

10. ஒலிவமலை - யோவான் 8:1

# வினா விடை - 70

*01.* யாருடைய கை செல்லவத்தை உண்டாக்கும்?

*02.* கனம் பொருந்திய ஒரு புருசன் யார்?

*03.* வாலிபரின் "அலங்காரத்தைக்" குறித்து எங்கே வாசிக்கிறோம்?

*04.* "சிங்காரவனம்" எது? எங்கே எழுதப்பட்டிருக்கிறது?

*05.* யாருடைய கை ஆளுகை செய்யும்?

*06.* "சபையிலே அநேகர் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளாதிருந்தார்கள்" எங்கே?

*07.* "கர்த்தர் ஞானமுள்ள தேவன்" என வாசிப்பதெங்கே?

*08.* "மகா புத்திமான்" அவன் யார்?

*09.* "நீரே என் இரட்சிப்பின் தேவன்" என்றது யார்?

*10.* "கர்த்தர் நீதி செய்கிற தேவன்" என்றது யார்?

7/2019
2018




**மத்தேயு 12:31 ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தச் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்: ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை.** யோவான் தன்னுடைய நிருபத்திலே எழுதுகின்ற போது **1யோவான் 5:16 மரணத்துக்கு ஏதுவல் லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக் கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்: யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே: மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்.** மரணத்திற்கு ஏதுவான பாவமுண்டு அதனைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன். இங்கே யோவான் கூறுகின்ற காரியம், "மரணத்திற்கு ஏதுவான ஒரு பாவம் உண்டு". இயேசு மத்தேயு சுவிசேஷத்திலே: "ஆவியானவருக்கு விரோதமாய் பேசப்படும் தூஷணமோ அது இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப் படாது" என்று சொன்னார்.

"பொதுவாக மன்னிக்கப் படாத பாவம் என்று சொல்கின்ற போது நாங்கள் அவிசுவாசத்தை எடுக்கலாம்". அதாவது தேவனுடைய குமாரனை விசுவாசிக்காமல் யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு நாளும் பரலோகம் கிடையாது. அவர்கள் அப்படியே தங்களுடைய பாவத்திலே தொடர்ந்து வாழ்வார்கள். அவர்களுடைய பாவம்

மன்னிக்கப்படவழியில்லை. தேவனுடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்காமல் அதாவது அவிசுவாசம் இருந்தால் அந்தப் பாவம் மன்னிக்கப்படமாட்டாது, அது ஒரு பகுதி. ஆனால் இயேசு கூறிய அடுத்த காரியம்: "மன்னிக்கப்படாத பாவம்". அதாவது "ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்".

நாங்கள் அனேக வார்த்தைகளைப் பேசும் போதும் சில வார்த்தைகளைப் பேச மாட்டோம். ஏனென்றால் எங்களுக்குத் தெரியும், அது கெட்டவார்த்தை — தூஷணவார்த்தை. ஆகவே ஒரு சிலதை அல்லது சிலர் பலதை அப்படியே நினைத்து வைத்திருக்கலாம். இவைகள் நான் மறந்து கூட மற்றவர்களுக்கு முன்பேசக்கூடாது. சில சொற்கள் நாங்கள் எல்லாரும் அறிந்தபடி அது தூஷண வார்த்தைகள். ஆனால் இன்னும் அதிகமான காரியங்களை நாங்கள் எங்கள் சொல்லாலும், எங்களுடைய செயலாலும் செய்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் அறிந்தவைகள் மட்டும் தான் இந்த தூஷண வார்த்தைகள் என்று நினைத்திருக்கலாம். ஆனால் இன்னும் அறியாதவைகளும் நாங்கள் செய்கின்றோம். அது தூஷிக்கின்ற தூஷண வார்த்தைகள். இந்த தூஷணத்தையும் - தூஷித்தலையும்கிட்டத்தட்ட ஒன்றாகத்தான் காட்டப்பட்டிருக்கின்றது. நாங்கள் யாரையாவது தூஷிக்கின்றோம் என்றால் அதற்கு அர்த்தம் என்னவென்றால் "அவரை நாங்கள் தூஷணமாய் பேசுகின்றோம்" என்பதே அர்த்தம்.

மத்தேயு சுவிசேஷத்தில் இயேசு அற்புத அடையாளங்களைச் செய்தார். ஆனால் அங்கே மக்கள் என்ன கூறினார்களென்றால், இவர் அசுத்த ஆவியாலே அப்படிச் செய்கின்றார். ஆகவே அந்தக் கட்டத்திலே தான் ஆண்டவர் கூறினார்: "நீங்கள் மனுஷ குமாரனுக்கு விரோதமாய் தூஷண வார்த்தைகளைச் சொன்னால் அது மன்னிக்கப்படும்: ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய் சொல்கின்ற தூஷணமும், எந்தப் பாவமும் மன்னிக்கப்படாது". அப்படியென்றால் இந்த இடத்திலே இயேசு கடுமையாக நிற்கின்றார். அவர் வந்ததன் நோக்கமே எங்களுக்கு மன்னிப்புத் தருவதற்கே. ஆனால் இந்த விடயத்தில் ஆண்டவர் சொல்கின்றார்: "நீங்கள் ஆவியானவரைத் தூஷித்தால் அதற்கு மன்னிப்பே இல்லை".

## 01. தேவ தூஷணம்

வேதாகமத்திலே பார்த்தால் தேவ தூஷணம் என்று ஒன்று உண்டு. இயேசு தன்னை தேவன் என்று வெளிப்படுத்தியபோது அவர்கள் சொன்னார்கள்: இவன் தேவ தூஷணம் சொல்கின்றான். ஆனால் இஸ்ரவேலர்கள் பார்த்தார்கள்: எங்களுடைய யெகோவா தேவன் இருக்கின்ற போது யோசேப்புடைய குமாரன் தன்னைத் தேவன் என்று சொல்கின்றானே. (இயேசு மெய்யான தேவன் என்பதனை அவர்களால ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது) ஆகவே அவர் தேவ தூஷணம் சொல்லுகின்றார் என்றார்கள். (இயேசு தேவன் என்பதை நாம் ஒரு போதும் மாற்ற முடியாது) "தேவனுக்கு ஒப்பாய், தேவனுக்கு நிகராய் தேவனுக்கு சமமாக: அல்லது மேலாக ஒரு மனிதன் தன்னைக் காண்பித்தால் அம்மனிதன் தேவ தூஷணம் சொல்வதாக கணிக்கப் பட்டது.

## 02. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணமும்: மனிதருக்கு விரோதமான தூஷணமும்.

அப்போஸ்தலனாகிய பவுல்: "சகல தூஷணங்களையும் விட்டு விடுங்கள்" என்று கூறுகின்றார். அப்படியென்றால் இந்த தூஷணம் சொல்லிலே இருக்கின்றது. இந்த தூஷணம் செயலிலே இருக்கின்றது. அதாவது "இன்னொருவருடைய கனத்தைக் குறைப்பது அல்லது இன்னொருவருடைய மரியாதையை இழக்காரமாய் பார்ப்பது" இவையெல்லாம் தூஷணம்.

இவ் வேதப்பகுதியில் பார்க்கின்ற போது தேவ ஆவியானவரை எப்படி தூஷணமாய் கூறினார்கள் என்றால், தேவ ஆவியானவர் அற்புதம் செய்கின்ற போது அசுத்த ஆவியினாலே செய்தார் என்று சொன்னார்கள். அதாவது தேவ ஆவியானவருடைய வல்லமையை மறுதலித்துச் சொன்னார்கள். ஆகவே இங்கு மனுஷரோடு பார்க்கின்ற போது இன்னொரு முக்கியமான காரியம்: இயேசுவைத்தான் அவர்கள் சொன்னார்கள். இவன் அசுத்த ஆவியினாலே தான் பிசாசுகளைத் துரத்துகினறான். அவர்கள் அங்கே இயேசுவைப் பார்த்தார்கள், அற்புதங்களைச் செய்தது இயேசு ஆனாலும் சொன்னார்கள்: இவன் அசுத்த ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகின்றான் என்பதாக. சில மனிதர்களை நாங்கள் தூஷிக்கும் போது, சில மனிதர்களை நாங்கள் குற்றப்படுத்தும் போது அவர் உண்மையாகவே ஆண்டவரால் அபிஷேகம் பண்ணப் பட்ட ஒரு மனுஷனாக இருந்தால் அந்த மனிதனுக்கு உள்ளே இருக்கும் தேவ ஆவியானவருக்கு விரோதமான தூஷணமாக அது மாறும். தேவ ஆவியானவருக்கு விரோதமான தூஷணமாய் அது மாறினால் அது இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படாது. "ஒரு மனுஷனை நாங்கள் இழிவாய் பேசும் போது அல்லது அவரைத் தாழ்த்திப் பேசும் போது அவையெல்லாம் வகை வகையான தூஷணம் தான்". **தேவன் மனுஷனை தன்னுடைய சாயலாகவும், தன்னுடைய ரூபத்தின்படியும் உருவாக்கி இருக்க அந்த மனுஷனை நாங்கள் பட்டப் பெயர் வைத்து அழைத்தால் அது தூஷணம்.** இங்கே இவரின் மூக்கைப்பார், இவருடைய கையைப்பார், இது சொத்தியாக இருக்கின்றது, இது சாதாரணமானது அல்ல. இது அவரை நாங்கள் தூஷணமாய் பேசுகின்றோம். உங்களுக்கென்ன விசரா? என்று சொல்வதெல்லாம், தேவனுடைய பார்வையிலே பயங்கரப்பாவம்.

ஆண்டவர் சொன்னார்: "தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகின்றவன் எரி நரகத்திற்கு பாத்திரன்". ஆண்டவர் உருவாக்கின அந்த மனுஷனை, ஆண்டவர் நல்ல புத்தி கொடுத்த அந்த மனுஷனை பார்த்து உங்களுக்கு என்ன பைத்தியமா? என்று சொல்வதெல்லாம் தூஷணம். நாங்கள் நினைக்கின்றோம்: சில சொற்கள் மட்டும் தான் தூஷணம் என்று. இல்லை இவைகள் எல்லாம் தூஷணம் தான். "மூடனே என்று சொல்லுகிறவன் எரி நரகத்திற்கு பாத்திரன்". மூடன் என்று சொல்லுகின்ற போது விசரன், லூசு என்ற சொற்பதங்கள் எல்லாம் பாவிப்பார்கள். இப்படி நாங்கள் ஒரு போதும் பேசக்கூடாது.

"ஒரு உண்மையான ஊழியக்காரன், ஒரு உண்மையான விசுவாசி, தேவனுக்குப்பயந்தவர்கள், தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்கள், தேவ ஆவியினால நடத்தப்படுகின்றவர்கள்

இவர்களைக் குறித்தெல்லாம் நாங்கள் கனக்குறைவாகவோ, தூஷித்தோ பேசும்போது அது பரிசுத்த ஆவியான வருக்கு விரோதமான தூஷணமாய் மாறிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

ஒரு உண்மையான காரியத்தை கூறுகின்றேன்: சில காலத்திற்கு முன்பதாய் இந்த காரியத்தை எங்களுடைய போதகர் கூறியிருந்தார்: ஒரு ஊழியக் காரனைக் குறித்து ஒருவர் அடிக்கடி தவறாய் பேசுவாராம். இச் செயலை அவர் தொடர்ச்சியாக செய்து வந்தார். இப்படியாக ஒரு நாள் இவர் இவ்விதம் பேசி வந்த அந்த மனிதனுடைய வாய் பேசமுடியாது போய்விட்டது. அந்த மனிதனுக்கு புரிந்துவிட்டது, நான் தேவனுக்குப் பயந்த இந்த மனிதனுக்கு விரோதமாய் செய்த, பேசிய இந்தக் காரியங்களின் நிமித்தம் என்னுடைய வாய்அடைபட்டுப் போய்விட்டது என்று. அவராலே கதைக்க முடியவில்லை, ஆனால் தன்னுடைய குற்றத்தை உணர்ந்து அவர் ஒரு தாளிலே மன்னிப்புக் கடிதம் ஒன்றை எழுதி அந்த ஊழியக்காரனிடம் சென்று கொடுத்தாராம். அதனை வாங்கிய அந்த ஊழியக்காரன் அவரை மன்னித்தார். ஆனால் தேவன் சொன்னார்: "நான் அவரை மன்னிக்கமாட்டேன்", நாம் சிந்திக்கலாம், ஏன் ஒரு சாதாரண மனிதனாலே மன்னிப்பு கொடுக்க முடிகிறது, அப்படியிருக்க ஏன் தேவனாலே மன்னிக்க முடியவில்லை. காரணம் என்ன தெரியுமா? நான் நினைக்கிறேன், இவருடைய தூற்றுதல் அந்த அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியனில் இருந்த தேவ ஆவியானவரைத் தூஷித்துவிட்டது.

ஏதோ ஒரு விதத்திலே தேவ ஆவியானவர் தாக்கப்பட்டுவிட்டார். அதனாலே தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தையின்படி சொன்னார்: நான் மன்னிக்கமாட்டேன். ஆகவே "தேவனுடைய பரிசுத்தவான்களைக் குறித்து, உண்மையுள்ள விசுவாசிகளைக் குறித்து, தேவனுக்குப் பயந்த பிள்ளைகளைக் குறித்தெல்லாம் நாங்கள் பேசும் போது மிகக் கவனமாய் இருக்க வேண்டும்". ஏனென்றால் அதனாலே நாங்கள் மன்னிக்கப்பட முடியாத பாவத்திற்குள்ளே விழுந்து போய்விடுவோம். பிற்பாடு நாங்கள் எவ்வளவாய் ஆராதனைக்கு வந்தென்ன, எவ்வளவாய் தேவனை ஆராதித்தென்ன? துதித்தென்ன? தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டென்ன? எங்களுக்கு மீட்பே இல்லை.

"எங்களுடைய வார்த்தைகள் மனிதனை அல்ல: சில வேளை அந்த மனிதன் மீது இருக்கின்ற தேவ ஆவியானவரைக் குற்றப்படுத்தும்". சவுல் மீது தாவீது ஏன் கைகளை வைக்கவில்லை தெரியுமா? அவனுக்குத் தெரியும், நான் சவுல் மீது கை வைத்தால் அவன் அபிஷேகிக்கப்பட்டவன், ஆகவே அவனுக்கு விரோதமாய் நான் கை வைத்தால் நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வேன். சவுல் மீது நான் கை வைத்தால் அவரிலே இருக்கும் தேவ ஆவியானவரை நான் குற்றப்படுத்துவேன். தேவ ஆவியானவரை தாக்கிவிடுவேன் என்பது தாவீதுக்குத் தெரியும். அதனாலே அவன் சவுல் மீது கை வைக்கவில்லை. அவன் மீது கையை வைத்தால் மன்னிக்கப்பட முடியாத பாவத்திலே நான் விழ வேண்டி வரும். பிற்பாடு நீங்கள் பார்த்தால் "தாவீது வாழ்வடைந்தான்: சவுல் மாண்டு போனான்". தேவ ஆவியானவரை நாங்கள் ஒரு போதும் துக்கப்படுத்தக் கூடாது. அதாவது இப்போது நான் கூறும் காரியம்: மனிதனுக்கு விரோத மாய் செய்கின்ற காரியம் தான். ஆனால் இது மறைவாக என்ன செய் கின்றது: தேவ ஆவியைத் தாக்குகின்றது. தேவ ஆவியானவரை நிந்திக்கின்றது: தேவ ஆவியானவரை தூஷிக்கின்றது.

நீங்கள் பாவம் செய்கின்ற போது இன்னொருவரால் கண்டிக் கப்படுவதனைக் குறித்து கூறவில்லை. மாறாக "நாங்கள் தேவனாலே வழி நடத்தப்படுகின்றவர்களைக் குற்றம் பிடிக்க வேண்டும், அவர்களைத் தாக்க வேண்டும் என்று நினைத்து

செய்தால் அது தேவ ஆவியான வரைத்தாக்கும்". கீழ்த்தரமான வார்த்தைகள் சில வேளைகளில் இவற்றை நேரே பேசமாட்டோம். ஆனால் மறைவாக ஒருவரைக் குறித்து பேசுவோம். அது தூஷணம். சில வேளை நாங்கள் வைத்தியரிடம் சென்று எமக்கு இருக்கின்ற வியாதியைக் குறித்து தமிழில் கூறுவதற்கு வெட்கத்தினால் அதனை ஆங்கிலத்தில் கூறுவோம். அது போன்று இந்த தூஷணத்தையும் சிலர் தமிழில் கூறாமல் ஆங்கிலத்தில் கூறுவார்கள். தமிழில் கூறினால் பாவம்: அதனை ஆங்கிலத்தில் கூறினால் பாவம் இல்லை என்பது போல் சிந்திக்கின்றோம். ஆனால் நாங்கள் மொழியை மாற்றிக் கூறினாலும் பாவம் பாவம் தான். பொருள் ஒன்று தான். ஆவியானவர் அதனால் துக்கப்படுவார். மனுஷன் நிந்திக்கப்படுவான், மனுஷனுடைய தரம் குறைக்கப்படும் கீழ்த்தரமான வார்த்தைகள், மனுஷர்களை நிந்திப்பது இவையெல்லாம் தூஷணம்.

ஒருவருக்கு நாங்கள் கனம் கொடுக்காமல் இருந்தால் அது **தூஷணம்.** ஒருவர் கூறினார்: கனம் கொடுக்க வேண்டிய ஒருவரோடு தனக்கு சிறிய பிரச்சனை வந்துவிட்டது!, தான் என்ன செய்தாரென்றால், கனம் கொடுக்க வேண்டிய அவருக்கு முன் சென்று: "எனது காலிற்கு மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்து கதைத்தேன்" என்று இவர் இன்னொருவருக்கு கூறினார். இவ்வாறு நாங்கள் செய்யும் போது நாம் வாயால் தூஷணம் பேசவில்லை, எங்கள் செயலின் மூலம் தூஷணம் பேசுகின்றோம்.

நாம்கனம்கொடுக்க வேண்டியவர்களுக்கு கனம் கொடுக்காவிட்டால் அவர்களைத் தூஷிக்கின்றோம். நாங்கள் ஒருவரைப் பார்த்து கண்களாலே ஆ... இவரா என்று ஒருவிதமாகச் செய்கின்ற போது நாங்கள் அவரைப் பார்வையாலே தூஷிக்கின்றோம். இதுவும் தூஷணம் என்பதனை நாங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். இது செயலாலே செய்யும் தூஷணம். அப்படியென்றால் நாங்கள் எத்தனை தூஷணம் சொல்லியிருப்போம்?

**ஒருவருக்கு கனம் கொடுக்க தவறினால் பிற்பாடு நாங்கள் எவ்வளவு கனத்தை கொடுப்போமென்று தீர்மானம் பண்ணினாலும அது கடினமாகத் தான் இருக்கும். ஏனென்றால், கூறிய தூஷணத்தை திரும்ப எடுக்க முடியாது. ஆகவே கனம் கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுங்கள்.**

இன்னொரு காரியம் இருக்கின்றது: இதனை நீங்கள் கேட்கின்ற போது இது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். சிலருக்கு அவர்களுக்கென்று பிரத்தியேகமான ஒரு கதிரை இருக்கும். அந்த கதிரையில் சில வேளைகளில் நாங்கள் இருந்தால் நாம் அவர்களின் நிலையை அவமதிப்பதாகவும், அவர்களின் கனத்தைக் குறைப்பதாகவும் இருக்கும். பாடசாலையில் ஆசிரியருக்கென்று ஒரு கதிரை இருக்கும். அதிலே மாணவர்கள் விளையாட்டிற்காக அதில் இருக்கலாம். ஆனால் அது எதனைக் காண்பிக்கின்றது? அந்த செயல் அந்த ஆசிரியரைத் தூஷிக்கின்றது.

**ஏசாயா 14:13-14 (13.) நான் வானத்துக்கு ஏறுவேன். தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்: வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், 14. நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்: உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.** இதுவே சத்துரு தோன்றிய விதம். அவன் தேவனுக்கு மேலாய் என் சிங்காசனத்தை உயர்த்துவேன் என்பதாக சிந்தித்தான். அதாவது பரலோகத்திலே தேவனுடைய ஆராதனை வழிநடத்தும் லூசிபர் என்று சொல்லப்படுகின்ற தூதன் மிக

அழகானவன். அவனுக்குள் ஒரு எண்ணம் வந்தது: நான் தேவனுக்கு மேலாய் உயருவேன். அந்த எண்ணம் என்ன தெரியுமா? தேவனை தூஷிப்பது. இது தேவனுக்கு விரோதமான தூஷணம். இது பாவம். தேவன் அந்த தூதனையும் அவனோடு இணைந்து மூன்றில் ஒரு பங்கு தூதரையும் தள்ளிவிட்டார். அவர்கள் தான் சத்துரு.

நாங்கள் சொல்லாலோ, செயலாலே இன்னொருவரைத் தூஷித்தால், ஆண்டவரால் தண்டிக்கப்படுவோம். போதகருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை நாங்கள் கொடுக்க வேண்டும். ஆசிரியருக்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுக்க வேண்டும். பெற்றோருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை நாங்கள் கொடுக்க வேண்டும். பெரியவர்களுக்கு (முதியவர்களுக்கு) கொடுக்க வேண்டிய கனத்தை நாங்கள் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்காவிட்டால் அவர்களை நாங்கள் செயலினாலே தூஷிக்கின்றோம். எத்தனையோ தூஷணங்கள் உண்டு. நாம் சிந்திக்கின்ற ஒரு சில காரியங்கள் மாத்திரமல்ல என்பதனால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

"நாங்கள் தூஷிக்கின்ற எல்லாரும் இரட்சிக்கப்படாதவர்களாய் இருக்கமாட்டார்கள். தூஷிக்கின்றவர்கள் எல்லாரும் அபிஷேகம் பெறாதவர்களாய் இருக்கமாட்டார்கள். அபிஷேகம் பெற்றவர்களை தூஷிக்க வேண்டி வந்தால் எங்களுடைய நிலமை மோசமாய் போய் விடும்". ஆகவே மனிதர்களைக்குறித்த தூஷணத்தைக் குறித்து கவனமாய் இருக்க வேண்டும். பவுல் சொன்னான்: **சகல வித தூஷணங்களையும் விட்டு விடுங்கள்.** ஆகவே பழைய தூஷணம், புதிய தூஷணம் எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும். இரண்டு அர்த்தம் கொள்ளும்படி பேசுவது, ஒருவர் ஆண்டவரோடு வைத்திருக்கும் உறவை, தரத்தை குறைத்து மதிப்பிடுதல் இக் காரியங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும்.

பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம். "ஆதியிலே பிதாவானாவர் கிரியை செய்தார். எங்களுடைய இரட்சிப்பின்கிரியையை குமாரனாகிய தேவன் செய்தார். இப்பொழுது இந்தக் கடைசி நாட்களில் தேவ ஆவியானவர் கிரியை செய்து கொண்டிருக்கின்றார்". எத்தனையோ விதமான கள்ள உபதேசங்களும், ஆவியானவரை மறுதலிக்கின்ற செயல்களும், தேவ ஆவியானவர் இல்லை, அவர் சாதாரண ஒரு சக்தி என்று சொல்லப்படுகின்ற செயல்களும், தேவ ஆவியானவரைத் தேவன் என்று ஏற்றுக் கொள்ளாத நிலையும் இந்த கடைசி நாட்களிலே சத்துரு அனேக இடங்களில் விதைத்திருக்கும் நாட்களில் தேவனை அறிந்திருக்கின்ற தேவனுடைய பிள்ளைகளாகிய நானும் நீங்களும் தேவ ஆவியானவருக்கு விரோதமாக அவருடைய வல்லமையைக் குறைத்தோ, அவருடைய செயற்பாடுகளைக் குறைத்தோ அல்லது அவர் எங்களுடைய வாழ்விலே செய்கின்ற செயல்களை மறுதலித்தோ அல்லது அவர் துக்கப்படும்படியாய் எந்த வார்த்தையைக் கொண்டும் அவரை நோகப்படுத்தாமல் எங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை நாங்கள் வாழ வேண்டும்.

இல்லையென்றால், அது தேவ ஆவியானவருக்கு விரோதமான தூஷணமாக போகும். இந்த விஷயத்தை நான் மிக ஆணித்தரமாய் அடித்து உறுதியாய் சொல்கின்றேன்: கடைசி நாட்களிலே ஆண்டவர் எங்கள் மத்தியிலே பெரிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று சொன்னால்: "நாங்கள் எல்லோரும் ஆவியானவருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை கொடுக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரை உண்மையான இருதயத்தோடு போற்ற

வேண்டும். அவரை நாங்கள் ஆராதிக்க வேண்டும்". அவர் தேவன், அவர் சர்வ வல்லமையுள்ளவர், இந்த நாட்களிலே சில கூட்டத்தினர் ஆவியானவர் இல்லை என்கிறார்கள் ஆவியானரைக் குறித்து எந்தக் கனமும் கொடுக்கமாட்டார்கள். அவர்களைக் குறித்து கவனமாயிருங்கள். எத்தனையோ ஆயிரம் பேர் நாங்கள் நேரடியாக பிதாவிடம் போகிறோம் என்று கூறிக்கொண்டு திரிகின்றார்கள். அவர்களில் ஒருவருடைய பாவம் கூட மன்னிக்கப்படாது. ஏனென்றால் தேவ ஆவியானவரை அவர்கள் இல்லை என்று சொல்கின்றார்கள். அப்படியானவர்களுடைய வலைக்குள் நீங்கள் விழுந்துவிடக்கூடாது. அவர்களுடைய புத்தகங்களை நீங்கள் வாசிக்கவும் வேண்டாம்.

**தேவ ஆவியானவர் மிக அருமையானவர், அவர் எங்களுக்காகப் பரிந்து மன்றாடுகின்றவர். அவர் தூய்மையானவர், அவர் பெலன் தருகின்றவர், எங்களுடைய பாவத்தை உணர்த்துகின்றவர், நீதியை உணர்த்துகின்றவர், நியாயத்தீர்ப்பைக் குறித்து உணர்த்துகின்றவர்.** இந்த கடைசி நாட்களிலே எங்களுக்கு வழிகாட்டுகின்ற தீபம் அந்த பரிசுத்த ஆவியானவரே. ஆகவே நீங்கள் எப்படி பிதாவையும், குமாரனையும் கனம்பண்ணுகின்றீர்களோ அதே போன்று தேவ ஆவியானவரையும் கனம்பண்ணுங்கள். ஏனென்றால் பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் ஒன்றாய் இருக்கிறார்கள். அவர்கள் இணைந்திருக்கின்றார்கள். அவர்களிலே எந்த வேற்றுமையும் இல்லை, அந்த மூன்று பேரிலும் எந்தப் பிரிவும் இல்லை. அவர்கள் மூவொரு தேவன. **ஆதியாகமம் 01ஆம் அதிகாரம் 01ஆம் வசனம் தொடக்கம் வெளிப்படுத்தல் 22ஆம் அதிகாரம் கடைசி வசனம் வரைக்கும் பார்த்தால் தேவ ஆவியானவரும் இயேசுவும்பிதாவும்சமமானவர்கள்என்பதனை** நீங்கள் காணமுடியும்.

ஆகவே எந்தக் காரணம் கொண்டும் அந்த பரிசுத்த ஆவியானவரை நீங்கள் குறைத்துப் பார்க்கக் கூடாது. விசேஷமாய் இந்த நாட்களிலே சொல்லும்காரியம், "ஆவியானவரை எங்கேயாவது நேரே கண்டு தூஷிக்கமாட்டோம். தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகின்ற யாரையும்நீங்கள் குற்றப்படுத்தினால் அது தேவ ஆவியானவரைத் துக்கப் படுத்தும்". **தேவனுடைய ஆவியினாலே எடுக்கப்படும் தீர்மானங்களை நாங்கள் அவமரியாதை செய்தால் அது தேவ ஆவியானவரை குற்றப்படுத்தும்.** தேவனுக்குள உண்மையாக வாழ்கின்ற விசுவாசப்பிள்ளைகளை நாங்கள் கேலி செய்தால், அவமரியாதைசெய்தால்அது ஆவியானவரைக் குற்றப்படுத்தும். பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை (அற்புதங்களை, வழிநடத்துதல்களை) அலட்சியம் செய்தால் அது பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்.

இந்த வழிகளிலிருந்து நாங்கள் எங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். ஆண்டவர் உங்களை நேசிக்கின்றார், அன்பான தேவன் இரக்கம் உள்ள ஆண்டவர் ஏன் இவ்வளவு பெரிய பாவியாய் இருந்த எங்களை மன்னிக்கின்றார். ஏன் அந்த ஆவியானவருக்குவிரோதமாய்சொல்லப் படுகின்ற காரியத்தை மன்னிக்கின்றார் இல்லை? இந்த விஷயத்திலே இயேசு மிக கண்டிப்பாய் இருக்கின்றார். நாங்கள் இந்தப் பாவத்திலே விழுந்தால் விழுந்தது தான். இது ஒரு மீள முடியாத பாவம். சில வேளை கடந்த நாடகளில் நாங்கள் என்ன செய்தோமோ? தெரியவில்லை. **நீங்கள் பெரிய மாற்றத்தை இனி காணவேண்டுமென்றால் அந்த ஆவியானவருக்கு வேண்டிய**

கனத்தைக் கொடுங்கள். ஆவியானவருக்கு விரோதமாய் எந்தத் தூஷணத்தையும், எந்தக் கனக் குறைவையும், கனவீனத்தையும் ஏற்படுத்தக் கூடாது. நீங்கள் எதனை செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ அதனை நீங்கள் செய்ய வேண்டும். எதனை செய்யக்கூடாது என்கின்றாரோ அதனை நீங்கள் செய்யாமல் விட வேண்டும். அப்படியில்லையென்று செய்தால் அதுவும் தேவ தூஷணம்.

தேவ ஆவியானவர் எமக்கு ஆசிரியராக இருக்கின்றார். தேவ ஆவியானவர் அவர் செம்மையானவர், அவர் எங்களை நேர்த்தியாய் வழிநடத்துகின்றவர். அவர் எங்களுடைய பாதைக்குத் தீபமானவர். அவர் கூறுகின்ற எதனையாவது நாங்கள் கேட்காமல் விடும் போது அவரை தூஷிக்கின்றோம். ஆகவே கண்ணும் கருத்துமாய் தேவ ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் என்பதில் கவனமாய் இருங்கள். எங்களில் இருக்கும் ஆவியானவரை நாங்ளே தூஷிக்க முடியும். ஆவியானவரை நோகப்படுத்தியிருந்த ஒருவரைக் குறித்து நான் அறிந்தேன். அந்த மனிதன் தேவனாலே வல்லமையாய் பயன்படுத்தப்பட்டார். அவர் செல்கின்ற இடமெல்லாம் அற்புதங்கள் நடைபெறுமாம். அப்படி பெரிய வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட அந்த மனிதன் பாவத்தில் விழுந்துவிட்டார். சில காலம் தொடர்ந்து அவர் அந்தப் பாவத்திலேயே இருந்தார். அதன் விளைவு என்னவென்றால்: அவர் சரீரம் புழுப்பிடித்தது. அவர் தன்னில் இருந்த ஆவியானவரை தானே தூஷித்துப் போட்டார். ஆவியானவர் உணர்த்தியும் அவர் அந்தப் பாவத்தை விடவில்லை. அதனாலே அந்த செயல் ஆவியானவருக்கு விரோதமான தூஷணமாய் போய்விட்டது. அதனாலே அவர் அப்படியே மரித்துவிட்டார்.

தேவ ஆவியானவர் எங்களை உணர்த்தும் போது செவிகொடுக்காவிட்டால் எங்கள் வாழ்வின் முடிவு வேதனையாக இருக்கும். "நாங்கள் எப்பொழுதும் கூர் உணர்வுத் திறன் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்". ஆவியானவர் தட்டும் பொழுது, ஆவியானவர் சொல்லும் பொழுது உடனே கீழ்ப்படிந்தால் ஆண்டவர் சந்தோஷப்படுவார். நாம் வாழ்வடைவோம். ஆவியானவரை உயர்த்துவோம், அவரை மகிமைப்படுத்துவோம், அவர் காரியங்களைச் செய்வார். ஆனால் இல்லை என்று சொல்லி எங்களுடைய இருதயங்களை மழுங்கப் பண்ணியிருந்தால் சில வேளைகளில் நாங்கள் செய்வது கூட பாவம் என்று எங்களுக்கே தெரியாமல் போய்விடும். ஏனென்றால் வேதம் சொல்கின்றது: மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யா. ஆவியானவர் ஒன்று அல்லது இரண்டு தடவைகள் உணர்த்துவார். அல்லது ஒரு சில நாட்களோ ஒரு சில காலங்களோ உணர்த்துவார். அதன் பிற்பாடு அவர் அப்படியே போய்விடுவார்.

இயேசு கிறிஸ்து தந்த அந்த இரட்சிப்பின் நிச்சயத்தில் தேவ ஆவியானவருடைய வழிநடத்தலோடு எங்களுடைய இறுதிக் காலம் வரை நாங்கள் ஓட வேண்டும். ஆண்டவர் தன் விருப்பம் போல எங்களை நடத்தட்டும்.

ஆகவே எல்லாத் தூஷணத்தையும் விடுங்கள். உங்களுடைய வாயிலிருந்து நல்ல ஊற்று புறப்பட்டுவரட்டும். யாக்கோபு சொல்கின்றார்: "ஒரு ஊற்றிலிருந்து தித்திப்பான தண்ணீரும் கசப்பான தண்ணீரும் வராது". தேவனுடைய பிள்ளைகளென்றால் ஆண்டவரைத் தூஷிக்கின்ற தூஷணங்களும். மனிதர்களைத் தூஷிக்கின்ற தூஷணங்களும் வராது. ஒரு சில காலங்களிற்கு முன் ஓரிடத்திற்கு சென்றிருந்தேன். அவர்களை வெளியே பார்த்தால் தற்சொரூபம். ஆனால் உள்ளே சத்தம் கேட்கின்றது, தகாத வார்த்தைகள். சில வேளைகளில்

இந்த தூஷணங்கள் வீடுகளை நிறைத்திருக்கும். இது சொல்வதற்கு மிகவும் துயரமான காரியம். தேவ பிரசன்னம் தான் எம்முடைய வீடுகளை நிறைத்திருக்க வேண்டும். ஆனால் தூஷணங்கள் நிறைத்திருக்கும். எப்படி நாங்கள் இந்த மன்னிக்கப்படாத பாவத்திலிருந்து எங்களை தப்புவித்துக் கொள்ளப் போகின்றோம்? உங்களுடைய மனைவி ஆண்டவருக்கு பயந்த ஒரு மனைவியாய் இருந்தால், கர்த்தருடைய வழியிலே நடக்கின்ற மனைவியாய் இருந்தால் சில வேளையிலே நீங்கள் பேசுகின்ற அந்த தூஷண வார்த்தையானது உங்கள் மனைவிக்குள் இருக்கின்ற தேவ ஆவியானவரைத் துக்கப்படுத்தும். அது போன்று உங்கள் கணவன் தேவனுக்குப் பயந்த ஒரு மனுஷனாக இருந்தால் நீங்கள் பேசுகின்ற அந்த தூஷண வார்த்தைகள் உங்கள் கணவனுக்குள் இருக்கின்ற தேவ ஆவியானவரைத் துக்கப்படுத்தும்.

ஆகையினாலே பவுல் சொன்னான்: "கெட்ட வார்த்தைகள் ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். பக்தி விருத்திக்கேதுவான நல்ல வார்த்தைகளைப் பேசுங்கள்". எங்களுடைய வீடு தேவ பிரசன்னத்திலே நிறைந்திருக்க வேண்டும். இப்படியான அசிங்கம், இப்படியான தூஷணங்கள், இப்படியான செயல்கள், ஆண்டவரை தூஷிக்கின்ற நிலைகள் வேண்டாம். உண்மையான வாழ்வுக்காய் எங்களை அர்ப்பணிப்போம்.

தேவன் சொன்னது போல "ஆவியானவருக்கு விரோதமாய் சொல்லப்படும் தூஷணம் மன்னிக்கப் படாது". "மனுஷருக்கு விரோதமாய் தூஷணம்". "தேவனுக்கு விரோதமான தூஷணம் - பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்" எதனையும் நீங்கள் பேச வேண்டாம். உங்களுடைய செயலிலும் அதனைச் செய்ய வேண்டாம். அப்படியாக நீங்கள் வாழும் போது காக்கப்படுவீர்கள். அது மாத்திரமல்ல, இந்தக் கடைசி நாட்களிலே தேவன் உங்களைக் கொண்டு தேசத்திலும், சபையிலும் பெரிய காரியங்களைச் செய்வார். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது.

"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"

**போதகர் வே.மகாராஜா**
**சீயோன் தேவாலயம்,**
**யாழ்ப்பாணம்.**

# தேவன் தந்த வைரங்கள்

- எமது சொந்த வாழ்க்கையை வாழ்வதன் அர்த்தம் கிறிஸ்துவின் சித்தத்திற்கு விலகுதல் ஆகும்.
- மரணவேளை வரையும் கிறிஸ்துவை மறவாதவனுக்கு மரணமில்லை.
- ஜெபிக்காத கிறிஸ்தவன் பேசாத ஊமை.
- தேவனுக்கு பயந்தவர்கள் செல்லும் பாதையால் தேவனுக்குப் பயப்படாதவர்கள் செல்ல முடியாது.
- கர்த்தருடைய பிள்ளைகள் நெருக்கப்படும்போது கர்த்தர் நெருக்கப்படுகிறார். ஆனால் கர்த்தரை யாரும் வெற்றி கொள்ள முடியாது.
- தேசம் அசைக்கப்பட தேகம் ஒறுக்கப்பட வேண்டும்.
- பெருமழை பொழிவதற்கு முன் சிறுமழை பொழிய வேண்டும் சிறுமழையின் மேகம் எங்கள் கண்கள்.
- வாழ்வின் உண்மையான வளம் பரிசுத்தம்.

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| **இலங்கை** | S.L Rs 220.00 Per Year |
| **இந்தியா** | S.L Rs 390.00 Per Year |
| **கனடா, அமெரிக்கா** | S.L Rs 840.00 Per Year |
| **சிங்கப்பூர், மலேசியா** | S.L Rs 420.00 Per Year |
| **மத்திய கிழக்கு நாடுகள்** | S.L Rs 510.00 Per Year |
| **ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா** | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

## சந்தா கூப்பன்

பெயர்:-.................................................................

விலாசம்:-.............................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

**தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.**

To:..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................


**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**